1984 மார்ச் 31]

தான் அது. நமக்கும் நம்முடைய மொழிக்கும் இருக்கும் அந்த உறவை வைத்து இருக்கும் அந்தச் சாதாரண மக்களுக்குப் பயன் படவேண்டிய ஒரு கருவி இந்த மொழி என்பதை நாம் பரவலாக சிந்திக்காததன் விளைவுதான் இன்றைக்கு இந்த நிலைமை இருந்து வருகிறது.

மேற்கொண்டு எழுத்து சீர்திருத்தம் கொண்டு வருவது சுலபம் அல்ல. இருப்பதை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு, ஓரளவுக்கு ஏற்றுக்கொண்ட பிறகு நாம் கொண்டு வருவதுதான் நல்லது.

திருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ்வழிப் பிரிவு வகுப்பு தொடங்கும் திட்டம்.

521 —(* வினா எண். 18431) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ் வழிப் பிரிவு (Tamil Medium) வகுப்பு தொடங்கப்பெற வேண்டும் என கோரிக்கை மனு ஏதேனும் மாணவர்களிடம் இருந்து வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கை அரசின் பரிசீலையில் உள்ளது.

வெளிமாநிலங்களில் தொழில்கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்.

522 —(* வினா எண். 21687) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்குப் பொறியியல் கல்வி படிப்பதற்குச் செல்லும் மாணவர்களுக்கு அரசு செய்யும் உதவிகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வெளி மாநிலங்களில் தொழில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு கீழ்க்கண்ட கல்வி உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

	இடம்.	உதவித் தொகை எண்ணிக்கை.
	(1)	(2)
1	இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், பெங்களூர்.	ஒரு வருடத்தில் ஒரு பாடப் பிரிவில் 1 மாணவர் வீதம் 8 பாடப்பிரிவுக்கும்.

இடம்.	உதவித் தொகை எண்ணிக்கை.
(1)	(2)
2 தேசிய சர்க்கரை பயிற்சி நிலையம், கான்பூர்.	வருடத்தில் ஒரு நபர் வீதம்.
3 அரசினர் சுரங்கப் பயிற்சிப் பள்ளி, கொத்தகுடம்.	வருடத்தில் 2 நபர்களுக்கு.
4 சுரங்கப்பள்ளி, கோர மாண்டல்.	வருடத்தில் 18 நபர்களுக்கு (புதியது மற்றும் புதுப்பித்தல் உட்பட).
5 கடல் பொறியியல் பயிற்சி நிலையம், கல்கத்தா.	வருடத்தில் 2 நபர்களுக்கு.
6 இந்திய சுரங்கப் பள்ளி, தன்பாத்.	இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மாணவர்களுக்கு.

மேற்படிக் கல்வி உதவி மாதம் ரூ. 125 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர, வெளிமாநிலங்களில், பயிலும் தமிழக மாணவர்களுக்கு (1) இயற்கை எய்திய அரசு ஊழியர்களின் மக்களுக்கான கல்வி உதவி (2) தாயகம் திரும்பியோரின் மக்களுக்கான கல்வி உதவி (3) 92 எம்.ஈ.ஆர். படி கல்வி கட்டண சலுகைகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப் பட்டறைகள்.

523—(* வினா எண். 21642) திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு, கொல்லுப் பட்டறைகள் எத்தனை ஒன்றியங்களில் இயங்குகின்றன ?

(ஆ) இதுபோல் தொழிற் பட்டறைகள் மற்ற பஞ்சாயத்து யூனியன்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 198 இடங்களி ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப்பட்டறைகள் 152 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுகின்றன.

(ஆ) அவைபோன்ற தொழிற்பட்டறைகளை மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது அமைக்கும் வாய்ப்பு இல்லை.